# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 706/2016
நாள் : 27/05/2019

திரு. கே.மெய்யன்,
சென்னை – 600 106. – முறையீட்டு மனுதாரர்

திரு. பு தமிழ்,
உதவி வருவாய் அலுவலர்,
சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை, அரும்பாக்கம், இராணி அண்ணா நகர், சேரன் தெரு, கதவு எண்.11/6, என்ற முகவரியில் வசிக்கும் திரு. கே. மெய்யன் என்பவரின் 16.07.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.07.2016 அன்று பெறப்பட்டு 706/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, அரும்பாக்கம், இராணி அண்ணா நகர், சேரன் தெரு, கதவு எண்.11/6, என்ற முகவரியில் வசிக்கும் திரு. கே. மெய்யன் என்பவர், அடையாறு, பரமேஸ்வரி நகரில் உள்ள யமுனா ஹோம்ஸ் என்ற அடுக்குமாடி குடியிருப்பில் A-22 என்ற குடியிருப்பு தளத்திற்கு சொத்துவரி மதிப்பீடு செய்து தனது பெயரில் தாக்கல் செய்ய மறுத்த சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டல உதவி வருவாய் அலுவலர் திரு. பு தமிழ் என்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். அடையாறு, பரமேஸ்வரி நகர், யமுனா ஹோம்ஸ் கட்டிடதாரர்களுக்கு1999–2000–ஆம் ஆண்டில் கட்டுமானப் பொருட்கள் மற்றும் ரூ.60 இலட்சம் நிதிஉதவி வழங்கியதற்கு ஈடாக யமுனா ஹோம்ஸ் அடுக்ககத்தில் A–22 எண்ணிட்ட குடியிருப்பு உட்பட சில குடியிருப்புத் தளங்கள் தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன என்றும், மேற்படி A–22 குடியிருப்புத் தளத்திற்கு மின் இணைப்பு தன்பெயரில் உள்ளது என்றும், அக்குடியிருப்புத் தளம் தன்வசம் உள்ளது என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பராமரிப்புக் கட்டணம் தற்போது வரை செலுத்தி வந்துள்ளதாகவும், இந்நிலையில், கட்டிடதாரர்கள் திரு தர்மலிங்கம் மற்றும் திருமதி விமலா தர்மலிங்கம் ஆகியோர் தன்வசம் இருந்த குடியிருப்புத் தளங்களை பிறருக்கு உரிமைமாற்றம் செய்து தருவதற்கு முயற்சித்ததை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, தனக்குச் சாதகமாக தடையாணை பெற்றுள்ளதாகவும், எனவே, யமுனா ஹோம்ஸ் அடுக்ககத்தில் உள்ள A–22 குடியிருப்பு தளம் சட்டரீதியாக தன்வசம் உள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். 2001–ஆம் ஆண்டு முதல் தன்பொறுப்பில் இருந்த A–22 குடியிருப்பு தளத்திற்கு சொத்துவரி விதித்து பெயர்மாற்றம் செய்யக் கோரியிருந்தும் மேற்குறிப்பிட்ட A–22 குடியிருப்பு தளத்திற்கான

சொத்துவரி தன் பெயருக்கு மாற்றம் செய்யவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாத நிலையில் மூன்றாம் நபர்களான திருமதி திலகவதி மற்றும் திரு கே. பிரசாத் ஆகியோர் பெயரில் பெயர்மாற்றம் செய்து தருவதற்குக் காரணமான மண்டல உதவி வருவாய் அலுவலர் திரு பு. தமிழ் என்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கோரி முறையீடு செய்துள்ளார். இது சம்பந்தமாக மனுதாரர் தாக்கல் செய்த வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு நகலையும் சமர்ப்பித்துள்ளார். மேலும் சென்னை மாநகராட்சி வருவாய்த்துறைக்கு முறையீடு செய்ததின்பேரில் திருமதி கே. திலகவதி மற்றும் திரு கே.பிரசாத் ஆகியோர் பெயரில் சொத்துவரி விதிப்பு செய்ததற்கான அறிவிப்பாணையின் செயலாக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் திரு கே. மெய்யன் அவர்களிடம் 17.08.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. அடையாறு, பரமேஸ்வரி நகர், யமுனா ஹோம்ஸ் அடுக்ககத்தில் உள்ள A–22 குடியிருப்பு தளத்தின் உரிமை குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தன்னால் தாக்கல் செய்திருந்த உரிமையியல் வழக்கு எண்.209/2002–க்கு உட்பட்ட அசல்மனு எண்.226/2002 வழக்கு இதுநாள் வரை நிலுவையில் உள்ளதாகவும், மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட இடைக்கால ஆணைப்படி செயல்படாததற்காகத் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.605/2002–ம் நிலுவையில் உள்ளதாகவும் விசாரணையின்போது தெரிவித்தார். திருமதி கே. திலகவதி மற்றும் திரு கே. பிரசாத் ஆகியோர் பொறுப்பில் யமுனா ஹோம்ஸ் A–22 குடியிருப்பு தளம் இல்லை என்றும், நீதிமன்ற ஆணையின்படி அவர்களது பெயரில் பெயர் மாற்றம் செய்து விதிக்கப்பட்ட சொத்துவரி இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேற்குறிப்பிட்ட குடியிருப்பு தளம் தன் வசம் உள்ளது என்பதற்கான ஆதாரங்களை சமர்ப்பித்துள்ள நிலையிலும் தன் பெயரில் சொத்துவரி மாற்றம் செய்து தரப்படவில்லை என்றும் இதற்கு காரணமான உதவி வருவாய் அலுவலர் திரு பு. தமிழ் என்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

3. எதிர்மனுதாரரான உதவி வருவாய் அலுவலர் திரு பு. தமிழ் அவர்களிடம் 20.09.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது மேற்குறிப்பிட்ட யமுனா ஹோம்ஸ் A–22 குடியிருப்புத் தளம் சம்பந்தமாக கட்டிடதாரர்களுடன் 22.12.1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விற்பனை ஒப்பந்தம் (Sale Agreement) மற்றும் கட்டுமான ஒப்பந்தம் (Construction Agreement), 21.04.2001ல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorundam of Agreement of understaning)ஆகிய ஒப்பந்த ஆவணங்களின் அடிப்படையிலும், சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.2674/2001ல் 14.06.2006 அன்று வழங்கிய தீர்ப்பின் அடிப்படையிலும் திருமதி திலகவதி மற்றும் திரு பிரசாத் ஆகியோர் பெயரில் சொத்துவரி விதிக்கப்பட்டது என்று திரு பு.தமிழ் அவர்கள் விசாரணையின்போது தெரிவித்தார்.

4. இந்நேர்வில், யமுனா ஹோம்ஸ் A-22 குடியிருப்புத் தளத்தின் மீதான உரிமை குறித்து திருமதி கே. திலகவதி மற்றும் திரு கே. பிரசாத் ஆகிய இருவரும் சென்னை உரிமையியல் நீதிமன்றத்திலும், திரு கே.மெய்யன், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்திலும் தங்களுக்குச் சாதகமான தீர்ப்புகளையும் பெற்றுள்ளனர். எனினும், இக்குடியிருப்பு மீதான உரிமை குறித்த வழக்குகள் முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ளன. எனவே, வழக்குகள் நிலுவையில் உள்ளதைக் கண்டுணர்ந்த சென்னை மாநகராட்சி, திருமதி கே. திலகவதி மற்றும் திரு கே. பிரசாத் ஆகியோர் பெயரில் சொத்துவரி விதிப்பு ஆணையை செயலிழப்பு செய்துள்ளது. எனவே, கடந்த ஆறு ஆண்டுகளாக மேற்குறிப்பிட்ட யமுனா ஹோம்ஸ், A-22 குடியிருப்புத் தளத்திற்கு சொத்து வரி வசூலிக்கப் படாமலேயே உள்ளது.

5. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் 13–வது மண்டல உதவி வருவாய் அலுவலர் அறிக்கையின்படி முறையீட்டு மனுதாரர் திரு K. மெய்யன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள W.P.No.4453/2016 வழக்கானது மக்கள் நீதிமன்றம் (Lok Adalat) எண்.2–க்கு மாற்றப்பட்டு நிலுவையில் உள்ளதென்று தெரியவருகிறது

6. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–இன் படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொள்ள இயலாது. எனவே, இந்நேர்வில், நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் சொத்துவரி விதிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019** ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. **திரு. கே. மெய்யன்,**
   **எண்.11/6, சேரன் தெரு,**
   **இராணி அண்ணா நகர்,**
   **அரும்பாக்கம்,சென்னை – 600 106.**

2. மண்டல அலுவலர்,
   **அடையார் மண்டலம் (மண்டலம் –13),**
   **சென்னை மாநகராட்சி,**
   **எண்.115, டாக்டர் முத்துலட்சுமி சாலை,**
   **அடையார், சென்னை – 20.**

3. **திரு பு. தமிழ்,**
   **மண்டல அலுவலர்,**
   **அடையாறு மண்டலம்,**
   **மண்டலம் –13,**
   **பெருநகர சென்னை மாநகராட்சி,**
   **சென்னை – 600 020.**

4. **மாநகராட்சி ஆணையர்,**
   **பெருநகர சென்னை மாநகராட்சி,**
   **ரிப்பன் மாளிகை,**
   **சென்னை – 6 00 003.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**